DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 130/2021 Crime No. 54/2017 Station Rayakottai PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw 11 /Pw9 / Mahadevan | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**18.03.2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

சத்தியமாக சொல்கிறேன்.

நான் FIR Cr.No.54/2017 பதிவு செய்து பதிவு செய்த தட்டச்சு FIR ஐ மேல் அதிகாரிக்கும் கணம் குற்றவியல் நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்து சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான நாகராஜ் மற்றும் அரிசந்திரன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன்.

மேலும் சம்பவ இடத்திற்கு சுமார் 10 அடி தூரத்தல் முற்புதரில் இருந்த இரும்பு கைப்பிடி போட்ட கொடுவாள், அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன்.

பிறகு இந்த வழக்கின் சாட்சிகளை 1 முதல் 8 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இந்த வழக்கு ஆய்வாளர் விசாரணை செய்யக்கூடிய வழக்காக மாறியதால் நான் அனைத்து வழக்கு கோப்புகளும் ஆய்வளர் வசம் ஒப்படைத்தேன்.

ஆய்வாளர் வழக்கு கோப்புகளை எடுத்துகொண்டு நான் விசாரித்த சாட்சிகளை மீண்டும் விசாரித்து அவர் புலன் விசாரணையை தொடங்கினார்.

சாட்சியிடம் சான்று பொள் MOA1 காட்டபட்டது இது தான் சம்பவ இத்தின் அருகாமையில் இருந்து எடுத்தாக கூறினார்ங

இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் **அ.த.சா.ஆ.7** ஆகவும், வரைபடம் **அ.த.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு 27.02.2017 ம் தேதி மதியம் சுமார் 2 மணிக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கு முதல் தகவல் அறிக்கை படி 19.02.2017 ம் தேதி காலை 9 மணிக்கு நடைப்பெற்றதாக குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

இந்த சம்பவத்தை குறித்து மற்றறொரு Counter வழக்கு குற்ற எண்.55/2017 ல் பதிவுசெய்யப்படட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

நான் 2 வழக்கிற்கும் முதல் தகவல் அறிக்கை நான் தான் பதிவு செய்தேன்.

இந்த வழக்கின் முதல் எதிரி தான் அந்த வழக்கின் புகார் தாரர் என்றால் சரிதான்.

இந்த வழக்கின் மனுதாரர் மற்றும் சாட்சிகளான சண்முகம், மாது அந்த வழக்கின் குற்றவாளிகள் என்றால் சரிதான்.

அந்த CC வழக்கில் சம்பவம் 8.30 மணிக்கு நடைபெற்றது என்று சொன்னாலும் இந்த சம்பவம் 9 மணிக்கு நடைபெற்றது என்று குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.
MOA1 இரும்பு பொருளாகவும் அதை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிய போது அதன் நீளம் சுமார் 47 செ.மீ தான் போடப்பட்டுள்ளது.
இது நீதிமன்றத்தில் மெசர் செய்த போது 17 ½ inch தான் வருகிறது அ.சா.1 விசாரணையின் போது தெரியவருகிறது என்றால் சரிதான்.
நாங்கள் அதை CP செய்யும் போதோ பறிமுதல் செய்யும் போதோ நாங்கள் வைத்திருந்த டேப்பில் அளந்ததால் இந்த தவறு ஏற்பட்டுவிட்டது.
MOA1 ல் ஒரு இரத்தக்கரை Stain உள்ளது அதை 7 நாட்களுக்குள் ஆய்வுக்கு Forensic ஏன் அனுப்படவில்லை என்றால் சரிதான்.
அதற்கான காரணம் எனக்கு தெரியவில்லை ஆனால் நான் அனுப்பவில்லை.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

**ஒம்./−திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**